**GOVERNMENT OF PUDUCHERRY**
**TRANSPORT DEPARTMENT**
***

No.0186/TD/RTO(HQ)/2017 dt: 20.04.2017

**PRESS RELEASE**

As per direction of the Supreme Court Committee on Road Safety dt. 27-12-2016 and as per Section 146 of the Motor Vehicles Act, 1988, the third party insurance coverage for all vehicles in India is mandatory.

All the owners of the Motor Vehicles are hereby requested to insure their vehicles under the third party insurance coverage. The vehicles plying without third party insurance will be detained by the Authority during enforcement and only after production of necessary valid Insurance Certificate by the owners to the concerned Authority the detained vehicle will be released.

In this connection, the Transport Department, Puducherry has already issued press releases on 12-11-2012 & 18-01-2017 respectively to create an awareness regarding the third party insurance coverage to all the General Public. The enforcement team will also monitor the same. Hence, all the owners of the motor vehicles are hereby requested to extend their kind co-operation to ensure coverage of third party insurance to their motor vehicles.

**(S.D. SUNDARESAN)**
**TRANSPORT COMMISSIONER**

புதுச்சேரி அரசு
போக்குவரத்து துறை
*******

எண்:0186/TD/RTO(HQ)/2017 புதுச்சேரி, தேதி: 20.04.2017

## செய்திக் குறிப்பு

சாலை பாதுகாப்பு தொடர்பாக, உச்ச நீதிமன்ற சாலை பாதுகாப்புக் குழுவின் 27.12.2016 தேதியிட்ட கடிதத்தின் அறிவுறுத்தலிற்கேற்ப மோட்டார் வாகனச் சட்டம் 1988 விதி எண்.146-ன்படி இந்தியாவில் உள்ள அனைத்து மோட்டார் வாகனங்களுக்கும் மூன்றாம் நபர் காப்பீடு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எனவே, மோட்டார் வாகன உரிமையாளர்கள் அனைவரும் தங்களிடம் உள்ள மோட்டார் வாகனங்களுக்கு மூன்றாம் நபர் காப்பீடு செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வாகன தணிக்கையின் போது மூன்றாம் நபர் காப்பீடு செய்யப்படாத வாகனங்கள் போக்குவரத்து அதிகாரிகளால் முடக்கம் செய்யப்பட்டு, மூன்றாம் நபர் காப்பீடு செய்த பிறகே, முடக்கிய வாகனங்கள் போக்குவரத்திற்கு அனுமதிக்கபடும் என்பது பொதுமக்களுக்கு தொரிவிக்கப்படுகிறது.

அனைத்து மோட்டார் வாகனங்களுக்கும் மூன்றாம் நபர் காப்பீடு செய்யவேண்டிய தேவை குறித்து புதுச்சேரி போக்குவரத்துத் துறை கடந்த 12.11.2012 மற்றும் 18.01.2017 ஆகிய தேதிகளில் பொது மக்களுக்கான விழிப்புணர்வு செய்திக்குறிப்புகளை வெளியிட்டுள்ளது. மேலும், வாகனத் தணிக்கை தொடர்ந்து நடைபெற உள்ளதால், மோட்டார் வாகன உரிமையாளர்கள் அனைவரும் தமது வாகனங்களுக்கு மூன்றாம் நபர் காப்பீடு செய்து போக்குவரத்துத் துறையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(எஸ்.டி.சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்

GOVT OF PONDICHERRY ★ TRANSPORT DEPARTMENT ★